**வில்கமுவ பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மே 03 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 27 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வில்கமுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கும்நிலையான சொத்துக் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 1,471,340 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டைக் கண்டறிந்து சரி செய்யப்பட வேண்டும். | வேறுபாட்டுக்கான காரணங்களைக் கண்டறிந்து சரி செய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்றில் மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றுக்கு இடையே ரூபா 1,332,696 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (iii) | மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்ட 25 | கடன்கொடுத்தோர் மீதி சரிசெய்யப்பட | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகளுக்குரிய ரூபா 3,173,963 தொகையான கடன்கொடுத்தோர் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது. | வேண்டும். | போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (iv) | மீளாய்வாண்டின் போது ஹெட்டிபொல நூலகத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த ரூபா 53,670 தொகையான புத்தகங்கள் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது. | நன்கொடை கணக்கீடு செய்யப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (v) | புற நெகும செயற்திட்டத்திலிருந்து கிடைத்த நீர்க் குழாய், பாகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியிருப்பிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இருப்பு மதிப்பீடு செய்யப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும். | இந்த பொருள் நன்கொடைகள் பெறுமதியின்றி வழங்கப்பட்டமையினால் மதிப்பீடு செய்ய முடியாதிருந்தமையின் காரணமாக இருப்பாக கணப்பீடு செய்ய முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |
| (vi) | மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குச் சொந்தமான காகிதாதிகளை உள்ளடக்கிய களஞ்சிய இருப்பு கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | காகிதாதிகள் இருப்பு கணிப்பீடு செய்யப்பட்டு இருப்பு சரிசெய்யப்பட வேண்டும். | களஞ்சிய முற்பணக்கு முறைமையைப் பின்பற்றுவதன் மூலம் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (vii) | மீளாய்வாண்டின் யூலை முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 424,100 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | முத்திரைக் கட்டணம் சரியாக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (viii) | மீளாய்வாண்டில் பெறப்பட்ட 04 முற்பண மீதிகளின் பெறுமதியான ரூபா 48,000 தொகை தீர்க்கப்படாமையினால் ஆண்டின் செலவினம் குறைத்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முற்பணத்தை தீாத்து செலவினம் சரிசெய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

### (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 12,795,223 கூட்டுத்தொகையான 13 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 3,153,574 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டைக் கண்டறிந்து கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | வேறுபாட்டைக் கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### (இ) தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற தொங்கல் கணக்கு மீதி ரூபா 1,501,545 ஆக இருந்த போதிலும் இது தொடர்பாக கண்டறிந்து கணக்குகளில் சீராக்கங்களைச் செய்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்குகளில் தேவையான சீராக்கங்களைச் செய்து தொங்கல் கணக்கு தீர்த்து வைக்கப்பட வேண்டும். | நூட்குறிப்பு இலகக்ம் 03, 06, 07 இன் கீழ் தொங்கல் கணக்கு சீராக்கப்பட்டுள்ளது. |

### (ஈ) பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல வருடகாலமாகக் கொண்டுவரப்படுகின்ற பெறவேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 910,704 தொகை அறவிடப்படவில்லை. | பெறவேண்டிய பணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வாடகை ரூபா 241,238 தொகையைப் பதிவழிப்பதற்காக பிரதம அமைச்சரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(உ) கணக்காய்விற்கான எடுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 74,642,244 பெறுமதியான 05கணக்கு விடயங்களுக்குரிய ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | வில்கமுவ பிரதேச சபையினால் உரிமை கோரப்படுகின்ற காணிப் பகுதியை சபைக்கு கையளிக்காமையின் காரணமாக பீ.எஸ். 46 இன் பிரகாரம் பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்த போதும் அந்த பதிவேட்டில் கையளித்தல் கட்டளை அல்லது உரித்துறுதி இலக்கம் குறிப்பிடப்படாமையினால் ஏனைய கணக்கு விடயங்களுக்காக சரியான பதிவேட்டை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 24 ஆம் பிரிவு | வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை. | சபைக்குரிய வீதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப் வேண்டும். | பிரதேசத்தின் சகல வீதிகளும் முறையான திட்டமொன்றுடன் இனங்கண்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | | | |
| | விதி இல. 217 | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற சகல காணி மற்றும் | காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக | பீ.எஸ். 46 இன் பிரகாரம் பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்த |

| | | |
|---|---|---|
| கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | பீ.எஸ். 46 படிவம் பேணிச் செல்லப்பட வேண்டும். | போதும் சபைக்கு கையளிக்காமையின் காரணமாக கையளித்தல் கட்டளை அல்லது உரித்துறுதி இலக்கம் என்பவற்றை குறிப்பிடுவதற்கு முடியாதிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,012,600 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,323,774 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,102,907 | 2,838,694 | 2,671,857 | 1,341,007 | 6,575,000 | 2,963,288 | 2,508,972 | 1,174,701 |
| (ii) | வாடகை | 1,800,000 | 1,929,720 | 1,929,720 | 900,069 | 1,780,000 | 1,764,868 | 1,764,864 | 900,069 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,715,000 | 1,252,183 | 1,252,133 | 1,980 | 1,665,000 | 1,384,138 | 1,384,138 | 1,985 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,291,200 | 1,709,188 | 1,762,188 | - | 1,636,000 | 1,889,789 | 1,889,789 | - |
| | மொத்தம் | 9,909,107 | 7,729,785 | 7,615,898 | 2,243,056 | 11,656,000 | 8,002,083 | 7,547,763 | 2,076,755 |

#### 2.2.2 ஆதன வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 269,786 தொகையான நிலுவை ஆதன வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சில வருடங்களாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 900,069 தொகையான நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வாடகையை பதிவழிப்பதற்கு மத்திய மாகாண பிரதம அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**2.2.4 நீர்க் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் இறுதியில் அறவிட வேண்டிய நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 1,071,222 தொகை அறவிடப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.5 விளம்பர அறிவித்தல் பதாதை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வில்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 27 இடங்களில் பொருத்தப்பட்டுள்ள விளம்பர பதாதைகளுக்குரிய ரூபா 93,100 தொகையான கட்டணம் அறவிடப்படவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டுள்ள உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறைபாடுகளைக் குறைத்து 2019 இல் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### (ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 3,261,483 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சரியான முககாமைத்துவம் இன்றி அரசாங்கத்தின் ஒதுக்கப்பட்ட காணியில் தினந்தோறும் அகற்றப்பட்டிருந்தது. | கழிவுப் பொருட்களை பொருத்தமான பிரகாரம் அகற்றுதல் வேண்டும். | பிரதேச சபைக்கு காணி உரித்து காணப்படாமையின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை வெவ்வேறாகச் சேகரித்தல் மற்றும் பொருத்தமான பிரகாரம் அகற்றப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலைபேறான கழிவுப் பொருள் முகாமைத்துவ பரிவொன்று ஸ்தாபிக்கப்படும். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடம் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையில் 10 பதவிகளில் 23 வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | இது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும், உள்ளூராட்சி ஆணையாளருக்கும், கௌரவ ஆளுநர் மற்றும் மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| முன்னாள் 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 88,823 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | இந்த உத்தியோகத்தர்களின் கடன் கோவை தொலைந்து போயிருந்தமையால் பிணைகாரரை இனங்காண முடியாதிருந்தது. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல்வேறு நிறுவனங்களினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 05 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்கப்படாத வாகனங்கள் கையேற்கப்பட வேண்டும். | இந்த வாகனங்களை பொருத்தமான பிரகாரம் கையேற்பதற்கும், ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 வாகனங்கள் நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது பொருத்தமான பிரகாரம் அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 இன் பொருள் மெய்யையாய்வு சபையின் மூலம் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த மின் பிறப்பாக்கி இயந்திரம் எந்தவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் காணப்பட்டது. | இயந்திரத்தை பயனற்று வைத்திருக்காமல் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹெட்டிபொல சிறுவர் பூங்காவை அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,650,000 செலவிடப்பட்ட சிறுவர் பூங்கா புல் பரவி காடு வளர்ந்திந்தமையால் எதிர்பார்த்த நலன் கிடைத்திருக்கவில்லை. | சொத்துக்களை பொருத்தமான பிரகாரம் பயயன்படுத்த வேண்டும். | மத்திய மாகாண ஆளுநரால் அனுப்பப்பட்ட ரூபா 30 இலட்சம் தொகையில் எதிர்காலத்தில் இந்த சிறுவர் பூங்காவை கவர்ச்சிகரமானதாக அமைத்து விளையாடுவதற்கு பொருத்மான நிலைக்கு கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் சுடலைக்கூடத்திற்காக பொருத்தமான உட்பிரவேச வழி அமைக்க முடியாமையினால் செலவிடப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகையிலிருந்து எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. | வீதி வசதிகளை அமைத்து அக்கபூர்வமாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண சபை நிதிஏற்பாட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 21 இலட்சம் தொகையில் மினிப்பே வாய்க்கால் ஊடாக பாலத்தை நிர்மாணித்து அதன் பின்னர் நுழைவு வீதியை அமைத்து சபை நிதியத்திலிருந்து அல்லது ஏனைய உதவிகளின் மூலம் இந்த சுடலைக்கூடத்தை கவர்ச்சிகரமானதாக அமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

## 3.5 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கைகளின் பிரகாரம் 04 நூலகங்களில் ரூபா 40,891 பெறுமதியான 407 புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த பணத்தை அறவிடுவதற்காக மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும். |